**Case No. STC. No.64/2025, Dated: 27.03.2026**

**PW-7 அந்தோணி மைக்கேல் (CMP.No.721/2025-ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 01.17.P.M):-**

**(எதிரி ஆஜர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. எந்த தேதியன்று புகார் பெறப்பட்டது என்றால் 24.11.2024-ம் தேதி காலை 11.00 மணிக்கு புகார் பெறப்பட்டது. புகார் பெறப்பட்ட தினத்தன்று வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். 27.11.2024-ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 24.11.2024-ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 27.11.2024-ம் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்கு இடைப்பட்ட காலதாமதத்திற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தது பின்னிட்டு தான் வழக்கு விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.5 என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.5-ல் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் 24.11.2024-ம் தேதி மதியம் 03.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது. மகஜர் சாட்சிகளை 24.11.2024-ம் தேதி காலை 11.00 மணிக்கு விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான், 27.11.2024-ம் தேதியன்று தான் விசாரணை செய்தேன். 1 முதல் 6 சாட்சிகளை புகார் பெறப்பட்ட தினத்தன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் முருகேசன் என்பவர் விசாரணை செய்தார், நான் அருகில் இருந்தேன்.

2. 24.11.2024–ம் தேதியன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் என வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் CSR–ல் குறிப்பிட்டுள்ளேன். வழக்கானது புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் ஊர் மந்தை என்றால் சரிதான். ஊர் மந்தையை சுற்றி நிறைய வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான். பொதுமக்களை சாட்சியாக விசாரணை செய்யாமல் ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர்களை மட்டும் சாட்சியாக இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது என்றால் பொதுமக்களை விசாரணை செய்தேன், எதிரிக்கு எதிராக எவரும் சாட்சி சொல்ல முன்வராததால் அவர்களை விசாரணை செய்யவில்லை.

3. மேற்படி விவரத்தினை வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக சரியாக புலன் விசாரணை செய்யாமல் தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.27.P.M):–**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.